பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 01 வெள்ளிக்கிழமை 14.01.2021 கதிர் 301

## கொரோனாவை மறந்த 2,490 பேர் சிக்கினார்கள்

கடந்த 24 மணிநேரத்தில் முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைக் கடைபிடிக்காமை போன்ற குற்றச்சாட்டில் 28 பேர் கைதாகியுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இன்று இதனைத் தெரிவித்தார்.

2

# நாடாளுமன்றில் 'கொரோனா' ஆட்டம்: ஆளும் கட்சி அலுவலகத்துக்குப் பூட்டு

### ஊழியர்களைத் தனிமைப்படுத்தவும் நடவடிக்கை



கொழும்பு, ஜனவரி 14

நாடாளுமன்றத்தின் ஆளும் கட்சி பிரதம கொறடாவின் செயலாளரும் பிரதமரின் மேலதிக செயலாளருமான சட்டத்தரணி சமிந்த குலரட்ணவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் நாடாளுமன்றத்திலுள்ள ஆளும் கட்சி அலுவலகமும், உறுப்பினர்களுக்குச் சேவை வழங்கும் அலுவலகமும் மூடப்பட்டுள்ளன.

2

## ஐ.தே.கவின் உப தலைவர் பதவியிலிருந்து ரவி 'அவுட்'

### கூட்டத்தைப் புறக்கணித்தமையால் வந்த வினை



ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் பதவியிலிருந்து ரவி கருணாநாயக்க நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக அகிலவிராஜ் காரியவசம் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டம் நேற்று கூடியது. இதன்போது புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இந்தக் கூட் டத்தை ரவி புறக்கணித்திருந்தார். இந்தநிலையிலேயே அவரிடமிருந்து உப தலைவர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

### லண்டனில் இருந்து பரவியதாகக் கருதப்படும்

## புதிய கொரோனா வைரஸ் இலங்கையில் சமூகத்துக்குள் காலூன்ற வாய்ப்பில்லை!

இலங்கையில்அடையாளம்காணப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் சமூகத்துக்குப் பரவ வாய்ப்பில்லை என்று தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இலங்கையின் கொரோனாத் தொற்று விடயங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய வகை கொரோனா பரவலைத் தடுப்பதற்காகப் பிரிட்டனில் இருந்து வரும் விமானங்கள் இடைநிறுத்தப்பட்டன எனவும், இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் ஒருவர் புதிய வகை கொரோனாவுடன்

2



### நீதித்துறை, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்த

## ஐரோப்பிய ஒன்றியம் 826 கோடி ரூபா நிதி



நீதி, உணவுப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்றத் தணிப்புப் பணிகளுக்கு உதவும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 8.26 பில்லியன் (826 கோடி) ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர்

2

## வாசுதேவவின் செயலருக்கும் கொரோனா



நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் பிரியத் பந்துவிக்கிரமவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நீர்வழங்கல் அமைச்சராகப் பதவி வகித்துவரும் வாசுதேவ நாணயக்காரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியமையை அடுத்து அவரது செயலாளரான பிரியத் பந்து விக்கிரமவும் தனிமைப்படுத்தப்பட்டார்.

பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

## இலங்கை உட்பட 11 ஆசிய நாடுகளின் பயணிகளுக்கு ஜப்பான் செல்லத் தடை

இலங்கை உட்பட 11 ஆசிய நாடுகளின் பயணிகள் இன்றிலிருந்து ஜப்பானுக்குப் பயணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்தே, ஜப்பான் போக்குவரத்துக் கொள்கையில் மாற்றங்களைக்கொண்டு வந்துள்ளது.

2

## மஹிந்தவின் பாதுகாப்புப் பிரிவில் பெண் அதிகாரிக்கும் கொரோனா!



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றி வருகின்ற பெண் பொலிஸ் அதிகாரிக்குக் கொரோனாத் தொற்று இன்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்ஹல்துமுல-ஹால்அட்டு தென்னபிரதேசத்தைச்சேர்ந்தவர் என்று ஹல்துமுல்ல சுகாதார சேவைப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த பெண் பொலிஸ் அதிகாரி நேற்றுமுன்தினம் வீடு திரும்பிய நிலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

2

## 2 வருடங்கள் 8 மாதங்களில் விடுதலையாகும் ரஞ்சன்!

நான்கு வருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, தனது சிறைத் தண்டனையை 2 வருடங்களும், 8 மாதங்களிலும் நிறைவு செய்ய முடியும் எனச் சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறைத்தண்டனை விதிக்கப்படும்ஒருவருக்கு, வருடமொன்றில் 8 மாதங்கள்

2



## நல்லூர் அலங்கார வளைவு செம்மணியில் இன்று திறப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடையாளப்படுத்தும் வகையில், ஏ -9 வீதிக்கு அண்மையில், செம்மணிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீதி அலங்கார வளைவு இன்று திறந்துவைக்கப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் சம்பிரதாய, பண்பாட்டு சின்னங்களைத் தாங்கியவாறு இந்த அலங்கார வளைவை அமைக்கும் பணிகள் இடம்பெற்றன.

அதன் கட்டுமாணப் பணிகள் நிறைவடைந்த நிலையில், நேற்றிரவு விசேட யாக பூஜைகள் இடம்பெற்றன.

இதன்பின்னர் தைத்திருநாளான

2

## இலங்கையில் புதிய கொரோனா வைரஸ் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் இலங்கையர்களுடன் தொடர்புபடாத காரணத்தால், புதிய வகை கொரோனா சமூகப் பரவல் ஏற்பட வாய்ப்பில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய வகை கொரோனா வைரஸ் கடந்த செப்டெம்பர் மாதம் இங்கிலாந்தில் அடையாளம்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளால் புதிய வகை கொரோனா வைரஸையும் கட்டுப்படுத்த முடியுமான நிலை தொடர்கின்றது எனவும் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தார்.

## கொரோனாவை மறந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த 28 சந்தேக நபர்களும் மேல் மாகாணத்துக்கு வெளியே உள்ள இடங்களில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி முதல் இன்றுவரை தனிமைப்படுத்தல் சட்டத்தை உதாசீனம் செய்த குற்றச்சாட்டில் 2 ஆயிரத்து 490 பேர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## நாடாளுமன்றில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கும், பிரதமரின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளருக்கும் ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று ஆளும் கட்சி பிரதம கொறடாவின் செயலாளருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து ஆளும் கட்சி பிரதம கொறடாவின் செயலாளருடன் தொடர்புடைய அலுவலகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நாடாளுமன்ற அதிகாரிகள், அந்த அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களைத் தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தநிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெறவிருந்த கட்சித் தலைவர்களின் கூட்டமும் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் மேலும் 400 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டன. அதன் முடிவுகள் இன்று மாலை வெளியாகவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய ஒன்றியம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டெனிஸ் சைபி மற்றும் இலங்கை திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல ஆகியோர் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கையின் நீதித்துறையைப் பலப்படுத்துவதற்கும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தி, பருவநிலை மாற்றத்தைத் தணிப்பது தொடர்பான திட்டங்களுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கு உரிய காலத்தில் நீதியை நிலைநாட்டுவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, பருவநிலை மாற்றம் காரணமாக எழுந்துள்ள பொதுவான சவால்களுக்கு இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்து செயற்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

## இலங்கை உட்பட 11 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜப்பானின் டோக்கியோ, ஒசாகா போன்ற நகரங்களில்ஏற்கனவே அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு இருந்ததோடு, மேலும் பல நகரங்களுக்கும் அது விரிவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை, தாய்வான், தாய் லாந்து, ஹொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம், தென் கொரியா மற்றும் சீனா போன்ற 11 நாடுகளில் இருந்தே, பயணிகள் ஜப்பானுக்கு வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக ரீதியான பயணங்களை மேற்கொண்டு ஜப்பானுக்கு வருவோர், ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை ஜப்பானுக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் 3 இலட்சத்துக்கு மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன் 4 ஆயிரம் பேரளவில் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவின் பாதுகாப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது அறிக்கை இன்று வெளியானது. அதற்கு முன் அவரது திருமண விவகாரங்களுக்காக ஹல்துமுல்ல பிரதேசத்தின் பல இடங்களுக்கும் சென்று வந்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் கொரோனாத் தொற்று உறுதியாகியிருப்பதால் அவர் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பிரிவு விவகார செயலாளர் ஒருவர் உட்பட அவர் சார்பில் பணியாற்றிவரும் இரண்டாவது நபருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியிருக்கின்றது.

## 2 வருடங்கள் 8 மாதங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாத்திரமே தண்டனைக் காலமாக கருதப்படும் எனச் சிறைச்சாலைகள் அமைச்சின் ஊடக செயலாளர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் சிறைத் தண்டனைக் காலம் ஒரு வருடமும் 4 மாதங்களினாலும் குறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ரஞ்சன் ராமநாயக்க 2 வருடங்கள் 8 மாதங்களில் விடுதலை செய்யப்படுவார் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிறந்த நடத்தையுடன் செயற்படாத கைதிகளுக்கு இந்தச் சிறப்புரிமை வழங்கப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நல்லூர் அலங்கார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று, நல்லூர் ஆலயத்திலிருந்து திறப்பு விழாவுக்குத் தேவையான பொருள்கள் பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டிலில், செம்மணி அலங்கார வளைவு அமைந்துள்ள இடத்துக்கு எடுத்துவரப்பட்டன.

தவில், நாதஸ்வரம் இசைக்க, சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்களைப் பாராயணம் செய்ய அலங்கார வளைவுத் திறப்பு விழா இடம்பெற்றது.

சிவாச்சாரியர்கள், சைவசமயப் பெரியவர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர், உறுப்பினர்கள், அதிகாரிகள், நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பரிபாலகர்கள் எனப் பலரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர்.








# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## கடன் வாங்கி கடன் அடைக்கும் அவலம்

கடன் வாங்கிக் கல்யாணம் என்பார்கள். இலங்கையின் அன்றாட நிலைமை அதுதான்.

இருக்கின்ற அரசாங்கம், எதிர்கால சந்ததியின் நெருக்கடிகள், பொறுப்புகள் கடப்பாடுகள் பற்றிக் கவலைப்படாமல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன்களை வாரிச் சுருட்டி எடுத்து, திட்டமிட்ட பொருளாதாரக் கட்டமைப்புகள் பற்றிச் சிந்திக்காமல் தன்பாட்டுக்கு செலவழித்துத் தள்ளி விட்டுப் போகின்றது. அடுத்து வரும் அரசு பார்த்துக் கொள்ளட்டுமே என்ற அலட்சியம்தான் பிரதான காரணம்.

நிலைமை இப்போது மோசமாகி கடனிறுக்க வகையற்ற கட்டத்தை எட்டி விட்டோம் என்பதுதான் அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

ஆரம்பத்தில் கடனை வாங்கிக் குவித்தோம். பின்னர் கடன் தவணை நிலுவைகளை வேறு புதிய கடன்களை வாங்கிக் கட்டிச் சமாளித்தோம். இப்போது புதிய கடனும் பெற முடியாது. கடன் தவணையையும் கட்ட முடியாத இக்கட்டு.

முடிந்த ஆண்டு இறுதியிலேயே வெளி நாட்டுக் கடன்களுக்கான நிலுவைத் தவணையைச் செலுத்த முடியாமல் போய், கடன் மீளளிப்புச் செய்ய இயலாத மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்படும் ஆபத்து இருப்பதாகக் கூறப்பட்டது. எனினும், இறுதி நேரத்தில் மேலும் ஒரு தொகை கடன் வழங்கி, மேலும் எம்மைக் கடனாளியாக்கி, வருடக் கடன் நிலுவைத் தொகையைக் கட்டுவதற்கு உதவியிருக்கின்றது சீனா.

கடன் வாங்கிக் கல்யாணம் போல சீனாவிடம் புதிய கடனை வாங்கி, பழைய கடன் தவணைக் கட்டணத்தைச் செலுத்தியிருக்கின்றோம். இதுதான் இந்த அரசினால் இயலுமான பொருளாதாரக் கொள்கை.

தற்போது நாட்டுக்கு 15 ஆயிரம் பில்லியன் (பதினைந்து லட்சம் கோடி) ரூபா கடன் உள்ளது. இதில் 48 வீதம் வெளிநாட்டுக் கடன்களாகும்.

2021 இல் – இந்த ஆண்டில் – தன்னுடைய கடன்களுக்காக மட்டும் 5.8 பில்லியன் டொலர் (சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபா) வட்டியை நாடு செலுத்த வேண்டும்.

இதனைச் செலுத்துவதற்கான வருமானம் நாட்டில் இல்லை. வருமானத்தை அதிகரிப்பதற்கான பொருளாதாரத் திட்டங்களை அரசு முன்னெடுப்பதாக இல்லை. அதற்கு மாற்றாக வேறு வழிகளை அரசு நாடுவது இன்னும் மோசமான பொருளாதார இக்கட்டுக்குள் – மீளவே முடியாத நெருக்கடிக்குள் – வீழ்த்தி விடப் போகின்றது.

கடன் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசு இரண்டு குறுக்கு வழிகளை நாடுகின்றது.

உள்நாட்டு தேசிய கடன்களைச் சமாளிப்பதற்காக அரசு வகை, தொகையின்றி புதிய நாணயத்தாள்களை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடுகின்றது. நிகரான தங்க அல்லது அந்நிய செலாவணி சேமிப்பு இன்றி இப்படி நோட்டுகளை அச்சிட்டுப் புழக்கத்திற்குத் தள்ளி விடுவது பண வீக்கத்தை மோசமாக ஏற்படுத்தும். நோட்டின் பெறுமதி குறையும். விலைவாசி எகிறும். இப்படிச் சங்கிலித் தொடராகப் பல பொருளாதார அனர்த்தங்கள் நேரும்.

இப்படி புதிய நோட்டு அடிக்கும் தந்திரம் வெளிநாட்டுக் கடன்களைச் சமாளிக்கும் விடயத்தில் வேகமாட்டாது. டொலரில் கடன் நிலுவையைச் செலுத்தும் வெளிநாடுகளுக்கான நமது கடப்பாட்டை உள்நாட்டுக் கரன்ஸிகளை அச்சிட்டுப் புழக்கத்துக்குத் தள்ளுவதன் மூலம் சமாளிக்க முடியாது.

டொலரில் வருமானம் வந்தால்தான் அந்தக் கடன் நிலுவைகளை – தவணைக் கட்டணங்களை – செலுத்த முடியும். ஆனால் அதற்கான திட்டங்களோ, துரதிருஷ்டியான பார்வையோ, கை சுத்தமான நிர்வாகமோ மாறி மாறி வந்த எந்த அரசுகளிடமும் இருக்கவில்லை.

அதனால் அவை புதுவிதமாக அப்பிரச்சினைகளைக் கையாள்கின்றன. குத்தகை, வாடகை என்ற பல்வேறு பெயர்களில் நாட்டின் தேசிய சொத்துக்களை டொலரில் விற்றுக் காசாக்குகின்றன. அதன் மூலம் வெளிநாட்டுக் கடன்களைச் சமாளிக்கும் எத்தனமே முன்னெடுக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகை என்ற பெயரில் விற்றமை, கொழும்பு கடற்கரையை ஒட்டி புதிய தரைப் பிரதேசத்தை உருவாக்கும் பெயரில் சீனாவுக்கு அந்தப் பகுதியை வழங்கியமை, கொழும்பு காலி முகத் திடலை ஒட்டிய பல சொத்துக்களை ஹோட்டல்கள் அமைக்கும் பெயரில் சீனா உட்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியமை எல்லாம் இப்படித் தேசிய சொத்துக்களை விற்று ஏப்பமிடும் நடவடிக்கைகள்தான். இதன் மூலம் நாட்டின் கடனை அடைக்கும் பிரச்சினையைத் தற்காலிகமாகத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு நாணயமாற்றில் பணமும் கிடைக்கின்றது. அதேசமயம் இடைத்தரகர்கள் மூலம் தமக்குரிய கையூட்டுப் பங்கும் வந்து சேருகின்றன என்பதால் அரசுத் தலைவர்களுக்கும் திருப்தி.

நாடும், நாட்டு மக்களும்தான் பெரும்பாவம் செய்தவர்கள். பொருளாதார விடயங்களில் தூர நோக்கற்ற – குறுக்கு வழிகளில் சொத்துத் தேடும் – தலைவர்களிடம் நாட்டை நிர்வகிக்க அளித்த மக்கள் விளைவுகளை வாங்கிக்கட்டித்தானாக வேண்டும்.

## முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கும் ஆரம்பப் பணி பல்கலையில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீண்டும் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தரின் பணிப்புக்கு அமைய பொறியியல் வேலை பகுதியினரால் அளவீடுகள் மற்றும் கட்டட வரைபடம் வரையும் பணி நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

மாணவர்களின் மேற்பார்வையோடு பொறியியலாளர், பல்கலைக்கழக கட்டடப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பிரிவினரால் நில அளவுத்திட்ட பிரமாணங்கள் போன்றன கணிக்கப்பட்டன.



இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் தூபியை அமைப்பதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்யும்!

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்மாகாணத்தில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்து சமுத்திர கடல் வள பாதுகாப்பு இலங்கை - மாலைதீவு கரிசனை!



கடற்றொழில் நடவடிக்கைகளில் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் ஓமர் அப்துல் ராக் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையில், மாளிகாவத்தையில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் பேசப்பட்டது.

குறிப்பாக இந்து சமுத்திரத்துக்கு அப்பாற்பட்ட நாடுகளில் இருந்து வரும் பாரிய மீன்பிடிக் கலன்களால் இந்து சமுத்திரத்தின் கடல் வளங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றமை தொடர்பாக இலங்கையின் நிலைப்பாட்டை மாலைதீவு தூதுவர் வெளிப்படுத்தினார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இது தொடர்பாக இலங்கையும் கரிசனை கொண்டிருப்பதாகவும் இந்து சமுத்திர நாடுகளுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து பொதுவான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்

அத்துடன், இந்த விடயம் தொடர்பாகக் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடற்றொழில் மற்றும் பருவகால - நன்னீர் மீன்பிடிகளின் செயற்பாடுகளில் அனுபவங்களையும் தொழில் நுட்பங்களையும் இரு நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பயிற்சிச் செயற்பாடுளை மேற்கொள்கின்றமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் அதிகரிக்கும் தொற்று மொத்தப் பாதிப்பு 400 ஐ தாண்டியது!

மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 24 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தின் மொத்த கொரோனா பாதிப்பு 420 ஆக அதிகரித்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, காத்தான்குடி, ஆரையம்பதி, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர்கள் என அவர் நேற்று (புதன்கிழமை) குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர்கள் 12 பேர் என்பதுடன், காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி சுகாதாரப் பிரிவுகளில் தலா நால்வரும் வெல்லாவெளி சுகாதாரப் பிரிவில் மூவரும் களுவாஞ்சிக்குடி சுகாதாரப் பிரிவில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பில் இதுவரை தொற்று கண்டறியப்பட்ட 420 பேரில் 145 பேர் குணமடைந்துள்ளமையுடன் நால்வர் உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் எழுமாறாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் ஊடுருவும் 150 மீற்றர் நீளச் சுரங்கம் கண்டுபிடிப்பு

ஸ்ரீநகர்,ஜன.14

காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் ஊடுருவுவதற்காக சர்வதேச எல்லையில் கட்டப்பட்ட 150 மீற்றர் நீள சுரங்கப்பாதையை இந்திய எல்லை பாதுகாப்பு படை கண்டுபிடித்தது.

காஷ்மீர் யூனியன் பிரதேசம் கதுவா மாவட்டம் ஹிராநகர் செக்டாரில் சர்வதேச எல்லையை ஒட்டி, எல்லை பாதுகாப்பு படையின் ரோந்து குழு நேற்று ரோந்து சென்றது. பயங்கரவாதிகள் கட்டிய சுரங்கப்பாதையை கண்டுபிடிப்பதற்காக ரோந்து பணியில் ஈடுபட்டது.

அப்போது, போமியான் கிராமத்தில் சர்வதேச எல்லையில் ஒரு சுரங்கப் பாதையை எல்லை பாதுகாப்பு படை ரோந்து குழு கண்டுபிடித்தது. அந்த பாதை, 150 மீற்றர் நீளத்தில் கட்டப்பட்டு இருந்தது. சுரங்கப்பாதையின் மறுமுனை, பாகிஸ்தான் பகுதியில் உள்ளது.

இந்த தகவல் அறிந்தவுடன், எல்லை பாதுகாப்பு படை ஐ.ஜி. ஜம்வால் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு நேரில் சென்று பார்வையிட்டனர். பின்னர், ஐ.ஜி. ஜம்வால் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்த சுரங்கப்பாதை, சம்பா, கதுவா மாவட்டங்களில் கடந்த 6 மாதங்களில் கண்டுபிடிக்கப்பட்ட 3 ஆவது சுரங்கப் பாதை ஆகும். அந்த சுரங்கப்பாதைகள் போலவே இதுவும் உள்ளது. பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்குள் பயங்கரவாதிகள் ஊடுருவ வசதியாக இது கட்டப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட மணல் மூட்டைகளில் பாகிஸ்தான் குறியீடு காணப்படுகிறது. எனவே, பாகிஸ்தான் அரசு அமைப்புகளின் தொடர்பு இருப்பது தெளிவாகிறது.

சுரங்கப்பாதையின் மறுமுனையில்,



பாகிஸ்தானின் ஷாகேர்கர் பகுதி உள்ளது. அப்பகுதி, பயங்கரவாதிகள் பயிற்சி முகாம்களுக்கும், தளங்களுக்கும் பெயர் பெற்றது ஆகும். இந்த பாதை, புதிதாக கட்டப்பட்டதா அல்லது பழையதா என்பது விசாரணைக்கு பிறகு தெரிய வரும். ஆனால், மணல் மூட்டைகளில் தயாரிப்பு ஆண்டு 2016 - 2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அப்போது கட்டப்பட்டதாக இருக்கலாம்.

கடந்த காலத்தில் இதன் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவினார்களா என்பது விசாரணைக்கு பிறகே தெரிய வரும். ஆனால், சமீப நாள்களில் ஊடுருவல் நடந்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், சமீப காலமாக ரோந்து பணியை தீவிரப்படுத்தி வருகிறோம்.

பயங்கரவாதிகளை ஊடுருவச் செய்ய பாகிஸ்தான் எப்போதும் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கிறது. ஆனால், எல்லை பாதுகாப்பு படை உஷாராக இருப்பதால், அதை முறியடித்து வருகிறோம். பாகிஸ்தானின் சதிகளை முறியடிக்க தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு அவர் கூறினார்.

# ஆஸியிலிருந்து கைலாசா நாட்டுக்கு 3 நாள்கள் இலவச ஆன்மிக சுற்றுலா

## பக்தர்களுக்கு நித்தியானந்தா அழைப்பு!

புதுடெல்லி,ஜன.14

தமது 'கைலாசா' நாட்டிற்கு வர விரும்புபவர்கள், இலவசமாக விமானத்தில் அழைத்துச் செல்ல உள்ளார் என சுவாமி நித்தியானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் திருவண்ணாமலையை சேர்ந்த நித்தியானந்தா, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தன்னுடைய ஆசிரமத்தை உருவாக்கி உள்ளார். இந்தியா மட்டுமின்றி, இவருக்கு என்று வெளிநாட்டிலும் பக்தர்கள் உள்ளனர். ஆனால், காலப்போக்கில் நித்தியானந்தா மீது பல குற்றச்சாட்டுகள் எழுந்தன

இதனால் இந்தியாவை விட்டு வெளியேறிய நித்தியானந்தா, கைலாசா என்று ஒரு தனிநாட்டை உருவாக்கி அங்கு தன்னுடைய ஆசிரம நிர்வாகிகளுடன் இருந்து வருகிறார்.அங்கிருந்த படி தொடர்ந்து வீடியோவை வெளியிட்டு வரும் இவர், சில மாதங்களுக்கு முன்பு, கைலாசாவிற்கான கொடி, கைலாசாவிற்கான பாஸ்போர்ட் போன்றவைகளை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிலையில், தற்போது, கைலாசாவுக்கு வருகை தர விரும்புவர்கள் மின்னஞ்சலில்(மெயில்) விண்ணப்பம் செய்யலாம் என்றும், எந்தவித கட்டணமும் இன்றி 3 நாள் விசா இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்களுக்கு பிறகு மனிதர்களை சந்திக்க உள்ளார் என அறிவித்துள்ள அவர் ஆர்வம் உள்ளவர்கள் கைலாசா வெப்சைட் மூலமாக தன்னை சந்திக்க விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளார்.



தினசரி 10 முதல் 25 நபர்களை மட்டும் சந்திக்கத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்

ஆர்வம் உள்ளவர்கள் ஆஸ்திரேலியா வந்தால் அங்கிருந்து கைலாசாவிற்கு தனி விமானம் மூலம் அழைத்து செல்லப்படுவார்கள் என்றும் அவர் தனது சத்சங்க உரையில் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா வரை சொந்த செலவில் வந்து விட்டால் அங்கிருந்து கைலாசாவுக்கு கருடா என பெயரிடப்பட்டுள்ள சிறிய விமானங்கள் மூலமாக கைலாசாவுக்கு எந்தவிதக் கட்டணமும் இன்றி அழைத்து வரப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமின்றி, மீண்டும் ஆஸ்திரேலியா திரும்பும் வரை உணவு, தங்குமிடம் போன்ற வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளின் டிராக்டர் பேரணியை தடுக்க நீதிமன்றை நாடும் பொலிஸ்!

## உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

குடியரசு தினமான வரும் 26 ஆம் திகதி டெல்லியை நோக்கி டிராக்டர் பேரணி நடத்த திட்டமிட்டுள்ள விவசாயிகளைத் தடுக்க டெல்லி பொலிஸார் உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

டிராக்டர் பேரணியைப் பிரம்மாண்டமாக நடத்தி டெல்லியின் போக்குவரத்தை ஸ்தம்பிக்க செய்ய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர் எனக் கூறிவரும் பொலிஸார் , விவசாயிகள் பேரணியில் காலிஸ்தான் பயங்கரவாதிகள் புகுந்து குடியரசு தினக் கொண்டாட்டத்திற்கு இடையூறை ஏற்படுத்தலாம் என்று கூறி உச்ச நீதிமன்றத்தில் டிராக்டர் பேரணிக்குத் தடை கோருகின்றனர்.

ஏற்கனவே விவசாயிகள் டிராக்டர் பேரணிக்கான ஒத்திகைகளை நடத்தி விட்டனர். பல்வேறு மாநிலங்களில் இருந்து டிராக்டர்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லியை நோக்கி வர உள்ளனர்.



கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1989.07.18
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூராடம்
செவ் - 4 இல்
பாவம் - 59
சூ/செ - 4 இல்
கல்வி - A/L
தொழில் - புடவைக்கடை
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1988.05.20
மதம் - இந்து V
நட்சத்திரம் - புனர்பூசம்
செவ் - 7 இல்
பாவம் - 67
கல்வி - BSc. பட்டதாரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# கோழி இறைச்சி, முட்டைகளுக்கு தடை வேண்டாம் என அறிவுறுத்தல்

## மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தெரிவிப்பு

கறிக்கோழி, முட்டைகள் போன்றவற்றின் கொள்முதலுக்கு தடை விதிக்க வேண்டாம் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

பத்து மாநிலங்களில் பறவைக்காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் பல்வேறு மாநிலங்கள் கோழி இறைச்சிக்கும் முட்டைக்கும் தடை விதித்துள்ளன.

ஆனால் நன்கு சமைக்கப்பட்ட சிக்கன், முட்டை சாப்பிடுவதால் பறவைக்காய்ச்சல் பரவாது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால் இறைச்சி வர்த்தகத்தைப் பாதிக்கும் வகையில் மாநில அரசுகள் தடை விதிக்க வேண்டிய அவசியமில்லை என்று மத்திய மீன்வள அமைச்சகம் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# கொல்கத்தா குடியிருப்பில் 40 வீடுகள் எரிந்து சாம்பல்

கொல்கத்தாவின் பாக்பஜார் பகுதியில் உள்ள குடிசை வீடுகள் அதிகமுள்ள குடியிருப்புப் பகுதியில் இன்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 40 வீடுகள் தீக்கிரையாகின.

25 தீயணைப்பு வாகனங்களில் வந்த 100க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கக் கடுமையாகப் போராடினர். பல மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு உயிர்ச்சேதம் ஏதுமின்றி தீ அணைக்கப்பட்டது.

வீடுகளில் இருந்த காஸ் சிலிண்டர்கள் வெடித்ததால் தீ வேகமாகப் பரவியதாக கூறப்படுகிறது.



# சிரியா மீது இஸ்ரேல் வான்வெளி தாக்குதல் ஈரான் கிளர்ச்சியாளர்கள் உள்பட 57 பேர் பலி



உள்நாட்டு போரால் பேரழிவை சந்தித்துள்ள சிரியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது.

இந்த நிலையில் இரு நாட்டு எல்லைப்பகுதியில் ஈரான் நாட்டின் ஆதரவு பெற்ற ஈரான் புரட்சிப்படை பிரிவினரும், வெளிநாட்டு போராளிகளும் இருந்தவாறு இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இவர்களை அழிக்க இஸ்ரேல் ராணுவம் சிரியாவில் அவ்வப்போது விமானப்படைகள் தாக்குதல் நடத்துவதுண்டு. நேற்றைய தாக்குதலானது கடந்த இரு வாரங்களில் சிரியா மீது நடாத்தப்படும் நான்காவது தாக்குதல் ஆகும்.

இந்நிலையில், சிரியாவில் உள்ள அல்பு கமல் மாகாணம் மற்றும் டெரி இசோர் நகரங்களை குறி வைத்து இஸ்ரேல் விமானப்படையினர் நேற்று அதிரடியான முறையில் கடும் விமானத் தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மொத்தம் 57 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்கள் சிரியா படையினர் மற்றும் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் என சிரியாவில் செயல்பட்டு வரும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட கிளர்ச்சியாளர்களில் பெரும்பாலானோர் ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# பதவி விலகினார் குவைத் பிரதமர்



2019 ஆம் ஆண்டு முதல் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான குவைத்தின் பிரதமராக இருந்து வந்தவர் ஷேக் சபா கலீத் அல் ஹமத் அல் சபா.

கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி குவைத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றதையொட்டி பிரதமர் கே் சபா தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார். புதிய அரசு பதவியேற்றதும் ஷேக் சபாவை மீண்டும் பிரதமராக அரசர் ஷேக் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபர் அல் சபா நியமித்தார்.

இந்த நிலையில் மந்திரிசபை அமைப்பதில் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கவில்லை என்றும் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் உறுப்பினர்களை தேர்வு செய்வதில் அரசின் தலையீடு இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் குற்றம் சாட்டினர்.

இது தொடர்பாக பிரதமரிடம் கேள்வி எழுப்ப கோரும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு 30 க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் அதற்கு ஆதரவளித்தனர். இதனால் நாடாளுமன்றத்தில் குழப்பம் உருவாகியதை அடுத்து புதிதாக அமைக்கப்பட்ட மந்திரிசபையின் மந்திரிகள் அனைவரும் கூட்டாக தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

மந்திரிகள் அனைவரும் ஒரே சமயத்தில் ராஜினாமா செய்ததால் பிரதமர் ஷேக் சபா தனது பதவியை ராஜினாமா செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார். அதன்படி நேற்று அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அதன்படி தன்னுடைய மற்றும் தனது மந்திரிகளின் ராஜினாமா கடிதங்களை அரசர் ஷேக் நவாப்பிடம் ஒப்படைத்தார்.

**அண்டார்டிக் பகுதியில் மட்டுமே வாழக்கூடிய அரிய வகை பென்குயின் முதன்முறையாக மெக்சிகோவில் உள்ள இன்பார்சா பூங்காவில் பிறந்துள்ளது.**

**ஜென்டு (Gentoo) வகையை சார்ந்த இந்த பென்குயினுக்கு அலெக்ஸ் என பெயரிடப்பட்டுள்ளது.**

**குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் மட்டுமே வாழக்கூடிய இந்த பென்குயினை பூங்கா நிர்வாகத்தினர் மிகவும் கவனத்துடன் பராமரித்து வருகின்றனர்.**



# மைக் பொம்பியோவுக்கு பங்களாதேஷ் கண்டனம்!

பங்களாதேஷில் அல் – குவைதா பயங்கரவாத அமைப்பு இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் மைக் பொம்பியோ வெளியிட்ட அறிக்கைக்கு பங்களாதேஷ் அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.ஒரு மூத்த தலைவரின் இத்தகைய பொறுப்பற்ற கருத்துக்கள் மிகவும் துரதிஷ்டவசமானவை, ஏற்றுக் கொள்ள முடியாதவை என பங்களாதேஷ் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறான ஆதாரமற்ற கருத்துக்களையும் பொய்யையும் பங்களாதேஷ் கடுமையாக நிராகரிக்கிறது என அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் நேற்று (புதன்கிழமை) இரவு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் எங்களது சாதனை உலகளாவிய பாராட்டைப் பெற்றுள்ளது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டுக்கு ஏற்ப, நாங்கள் பதினான்கு சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு மாநாடுகளில் ஓர் அங்கத்தவராகிவிட்டோம். பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான சர்வதேச தடுப்பு முயற்சிகளுடன் இணைந்து தீவிரமாகச் செயற்படுகிறோம் என பங்களாதேஷ் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறையின் இணையதளத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் மைக் பொம்பியோ சில நாடுகளை பயங்கரவாதமையங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதில், ஈரானை அல் – குவைதாவின் புதிய வீட்டுத் தளம் எனத் தெரிவித்திருந்த நிலையில், இதற்கு ஈரான் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தது. அத்துடன், லிபியா, ஜேர்மன் மற்றும் மாக்ரெப் போன்ற நாடுகளிலும் அல் – குவைதாவின் ஆதிக்கம் இருப்பதாக பொம்பியோ தெரிவித்திருந்தார். இந்த வரிசையில், பங்களாதேஷிலும் அல்–குவைதா இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்த நிலையில் பங்களாதேஷ் தரப்பிலிருந்து கடுமையான கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது

# அரசியல் விளம்பரங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

## கூகுள் தெரிவிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடன் வரும் 20 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

இதற்கிடையே கடந்த 6 ஆம் திகதி ஜோபைடனின் வெற்றியை உறுதிசெய்து சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க பாராளுமன்றம் கூடியவேளை ட்ரம்ப் ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து பெரும் வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்த விவகாரத்தில் இணையதள பக்கங்களில் வெளியான தேர்தல் முடிவுகள் தொடர்பான அரசியல் ரீதியிலான விளம்பரங்கள் வன்முறைக்கு ஒரு காரணமாக இருந்தது. தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக பல கருத்துக்கள் சமூகவலைதளம் மூலம் பரவியது. இந்த விளம்பரங்கள் வன்முறை ஏற்பட காரணமாகவும் அமைந்தன.

இந்நிலையில், தங்கள் இணையதள பக்கங்களில் அரசியல் ரீதியிலான விளம்பரங்களை வெளியிட கூகுள் நிறுவனம் தற்காலிக தடை விதித்துள்ளது.

ஜோ பைடன் பதவியேற்பு, நாடாளுமன்ற கட்டிட வன்முறை, டொனால்டு ட்ரம்ப் பதவிநீக்கம் செய்யும் நடைமுறைகள் தொடர்பான அரசியல் ரீதியிலான விளம்பரங்களை இன்று முதல் வரும் 21 ஆம் திகதி வரை வெளியிட கூகுள் நிறுவனம் தடை விதித்துள்ளது.

ஜோ பைடன் 20 ஆம் திகதி பதவியேற்க உள்ள நிலையில், கூகுள் நிறுவனத்தின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.



# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா பற்றுறுதி கொண்ட பங்காளி!



## ஜெய்சங்கர் திட்டவட்டம்

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா பற்றுறுதி கொண்ட பங்காளியாகத் தொடர்கிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளில் அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு இந்தியா எண்ணியுள்ளது என அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வசிக்கும் குடும்பங்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்தியாவின் பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் இலங்கைத் தீவின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும், வடக்கில் யாழ்ப்பாண கலாசார மையம் மற்றும் ஹற்றன் டிக்கோயாவில் வைத்தியசாலை ஆகியவை இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் நிதிக்கடன் திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்துக்கான தொடரூந்து பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் இந்திய நிதியைக்கொண்டு நடைபெற்றுவருகின்றன. அத்துடன் மலையகத்துக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் மேலதிகமாக அறிவிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் அடுத்த நான்காண்டுகளில் பூர்த்தியாகவுள்ளன.

பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு, அம்புலன்ஸ் சேவைகள், பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், கல்வியை மேம்படுத்துதல் போன்ற எமது கடந்தகால கருத்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் முழு இலங்கையிலும் கொரோனாவுக்குப் பின்னரான பிராந்திய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சமூகத்தையும் மனித வளங்களையும் கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதனைக் கருத்திற்கொண்டு, எங்கள் வளர்ச்சிக் கூட்டாண்மைக்கான எதிர்கால செயற்றிட்டம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். உள்நாட்டு தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் ஆராய்ந்து எமது உரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாம் கல்வி, திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் எமது அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளோம். - என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர் திருநாளில் களைகட்டியது யாழ்!





தமிழர் திருநாளாம் தை திருநாளை யாழ்ப்பாண மக்கள் மகிழ்வுடன் கொண்டாடினர்.

பொங்கல் விழாவையிட்டு, யாழில் மக்களின் இல்லங்கள் தோறும் பொங்கல் பொங்கப்பட்டுள்ளதுடன் யாழ். நகரில் வர்த்தக நிலையங்களிலும் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

நாட்டில், ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தெற்று அச்சம் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொங்கல் தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ளம்!



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் தற்காலிக வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உடனடி நிவாரண உதவிகள் கண்டாவளை பிரதேச செயலகத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ச்சியான மழை காரணமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஊரியான் பகுதியில் தற்காலிக வீடு இவ்வாறு சேதமடைந்தள்ளது.

அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் உள்ளிட்டோர் நேரில் சென்று பார்வையிட்டு கூரை விரிப்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிப் பொருள்களை வழங்கி வைத்தனர்.

அத்துடன் அந்தக் குடும்பத்துக்கான நிரந்தர வீடு அமைப்பதற்கான நடவடிக்கையை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளவும் பிரதேச செயலாளர் உறுதி வழங்கியுள்ளார்.

# வவுனியா பொது வைத்தியசாலையின் ஊழியர்கள் இருவருக்குக் கொரோனா!

வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருக்கின்றமை அண்மையில் உறுதிசெய்யப்பட்டிருந்தது.

அவருடன் தொடர்புகளைப் பேணிய சில ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கு தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போதும் அவர்களுக்கு தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த இருவருடன் வவுனியாவில் கடந்த ஒருவாரத்தில் மாத்திரம் 148 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மன்னாரில் மேலும் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

மன்னார் மாவட்டத்தில் மேலும் ஐவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை மன்னார் மாவட்டத்தில் 31 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னாரில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

மன்னார் மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் மூவர் மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள். ஏனைய இருவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிசிச்சைக்காகச் சென்ற போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில் ஒருவர் எருக்கலம்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த பெண். அவருடைய கணவர் வெளி மாவட்டத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். ஏனைய நபர் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர்.

இவர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான பரிசோதனைகளை மேற்கொண்டு அவர்களை சுய தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையர்கள் 6 மாதங்களுக்கு பெரும் தியாகம் செய்ய வேண்டும்!

## சுகாதார அமைச்சர் கோரிக்கை



புதிய வருடத்தில் எதிர்வரும் ஆறு மாத காலத்துக்குள் அனைத்து இலங்கையர்களும் பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்ப புதிய வருடத்தில் இத்தகைய தியாகங்களைச் செய்ய வேண்டும் எனக் கூறினார்.

கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்க முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அரசாங்கத்தின் கொரோனா கட்டுப்பாட்டு திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2021இல் வெளியிடப்பெற்றது.

# அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவு
# கவிதைப் போட்டி முடிவுகள்

**1. பாடசாலை மாணவர்களுக்கானது [தரம் 1 முதல் 12 வரை]**

**"கை கழுவினார்கள்....."**

1ம் பரிசு - 3000/- :- அன்னலிங்கம் அபிநயா, நாவற்கிணற்றடி, குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

2ம் பரிசு - 2000/- :- அம்பிகை சண்முகலிங்கம், அம்பலவாணர் பாதை, திருநெல்வேலி.

3ம் பரிசு - 1000/- :- இம்தியாஸ் பாத்திமா இன்ஷிபா 4/சி /2, மடவலி றோட், பொல்கொல்ல

**2. பெரியவர்களுக்கானது [வயது எல்லை கிடையாது]**

**"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."**

1ம் பரிசு - 5000/- :- பிரதாயினி ஸ்ரீராகவராஜன், 35பி, விவேகானந்தா வீதி, கொழும்பு - 06

2ம் பரிசு - 3000/- :- லோ.மேரி நிறோசனா, தாதியர் பயிற்சி கல்லூரி, யாழ்ப்பாணம்.

3ம் பரிசு - 1000/- :- ஏ.கரஜன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவுக்கவிதைப் போட்டியில் பெருமெண்ணிக்கையான போட்டியாளர்கள் பங்குபற்றியமையையிட்டு நினைவுப்போட்டிக்குழுவினர் பெருமகிழ்வு அடைவதுடன் தாங்கள் தமிழ் மீதும், கவிதை மீதும் கொண்டிருக்கும் அன்பையும், ஆதரவையும் கௌரவிக்கும் வகையில் மிகச்சிறந்த 25 போட்டியாளர்களுக்கு சான்றிதழ் கௌரவத்தை வழங்கி கௌரவிக்கின்றோம். மேற்படி வெற்றியாளர்களின் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு காலைக்கதிர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு

**போட்டி ஏற்பாட்டாளர்:- திரு.ஜொணி மதுரநாயகம். இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## கௌரவ சான்றிதழ் பெறுவோர்

**"கை கழுவினார்கள்....."**

01. பவானந்தமூரத்தி சங்கவி, யா/இணுவில் மத்தியகல்லூரி
02. ஜெ.தவேதன், தொட்டிலடி,சங்கானை
03. மோ.மாதுரி, யா/வேலணை மத்திய கல்லூரி
04. ம.ஹிருத்திக், -
05. Fathima Zeena, Dharmapuriya, Kandy
06. பா.அஸ்வினா, -
07. மதியாபரணம் மேருயா, மன்/இலுப்பைக் கடவை தமிழ்மகா வித்தியாலயம்.
08. பா.அபிநயா -
09. ம.பானுஜன் -
10. பிருந்தாஜினி புவனேந்திரன், யா/ வேம்படி மகளிர் உயரதர பாடசாலை
11. மோ.சாருஜா, இல. 46/02, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
12. வேலாயுதபிள்ளை ஹிசோன், நாவற்காடு, வரணி.
13. ம.டிலுக்ஷிகா, கிராம்புவில், சாவகச்சேரி.
14. சரணிகா புவீந்திரன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
15. ப.கயலினி, இல.எம்3, மாவடி, இராமநாதபுரம், கிளிநொச்சி.
16. சத்தியகுமார் தமிழினி, புகழேந்திநகர, நமணாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு.
17. சந்திரகுமார சரண்யா, சரவணை மேற்கு, வேலணை
18. ற.சத்யசனாதன், சாயி இல்லம், அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்
19. ரவிச்சந்திரன் நிஷாந்தினி, 8ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை
20. சிவசுந்தரம் பவிசாயினி, அச்சுவேலி தெற்கு
21. வினாயகமூர்த்தி அபிவர்மன், மூங்கிலாறு வடக்கு, உடையாரகட்டு, முல்லைத்தீவு
22. கிருஸ்ணகுமார லோஜினி, இல. 19/1, தாளையடி லேன், யாழ்ப்பாணம்
23. குகேந்திரன் ஜிஸ்ணுகா, டாக்டர்.செல்லத்துரை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை
24. விவேக்கா சற்குணேஸ்வரன், இல. 47, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."**

01. தர்சினி ஞானேந்திரன், இல. 30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
02. டி.அகல்யா, இல. 66/5, 5ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்.
03. ஸ்ரீ.சோபிகா, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
04. நிலுக்ஷினா சந்திரகுமார், கலட்டி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
05. க.பேரின்பநாயகம், இல. 17/1, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
06. ரானுகா கண்ணன், ஞானாசாரியார் வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி
07. சே.யோசப்பாலா, இல. 10/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
08. நா.பாரதப்பிரியா, இல. 111/4, கந்தசாமி கோவில் வீதி,திருமலை
09. ர.மதுமிதன், இல. 158/79, குட்செட் வீதி, வவுனியா.
10. தம்பிராசா சுதர்ணியா, பழைய பேக்கரி வீதி, நாகபுரம், மகிழூர், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
11. அ.சேவியர் றவ்பாயெல், ஐயனார வீதி, சுன்னாகம்.
12. வ.சசிகுமார், செல்வபுரம், கச்சாய்வெளி,பளை.
13. ஸ்ரீலங்கரூபன் ஜஸ்மிகா, வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி
14. அபிவர்ண்ணா வினாயகமூர்த்தி, மூங்கிலாறு வடக்கு, உடையாரகட்டு, முல்லைத்தீவு
15. கே.எஸ்.சிவஞானராஜா, இல. 115/1, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
16. எஸ்.கே.கணேசவேல், பிரசித்த நொத்தாரிஸ், இல. 25, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்
17. ச.சரணியா, இல. 36/16, ஜே.சுமேதகமே, திருகோணமலை
18. புஸ்பராசா கோபிகா, சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.
19. சிவராமலிங்கம் சிந்துஜா, 4ம் வட்டரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
20. செ.சக்தீனா, ஊரெழு கிழக்கு, ஊரெழு.
21. யிகிர்தா சந்திரசேகரன், பொன்னாலை வீதி, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
22. டி.தமிழ்வாணி, பேராதனைப்பல்கலைக்கழகம், கண்டி
23. நருமதா சாரங்கன், அமுதசுரபி பாடசாலை வீதி, நெல்லயடி, கரவெட்டி
24. கோஜியா நவரூபன், இல. 273/07, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
25. இந்திரன், சூரிச், சுவிற்சர்லாந்து